செய்தி வெளியீட்டு எண்.175 நாள்.30.03.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் இலவச வீட்டு மனை பட்டாக்களை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ. ஏழுமலை ஆகியோர் வழங்கினார்கள்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இலவச வீட்டு மனை பட்டாவினை பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ. ஏழுமலை ஆகியோர் இன்று (30.03.2017) வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் வட்டம், காக்களூர், புன்னப்பாக்கம், ஒதிக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 56 நபர்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 4 பயனாளிகளுக்கும் இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது. மேலும், மாவட்டத்தைச் சேர்ந்த 91 திருநங்கைகளுக்கு என மொத்தம் 151 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ.ஏழுமலை, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.திவ்ய ஸ்ரீ, திருவள்ளூர் வட்டாட்சியர் திருமதி. கார்குழலி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~